தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, ஆனி 21, திருவள்ளுவர் ஆண்டு–2049

2018 ஜூலை 5, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு."

பொருள் வரும் வழிகளை உண்டாக்குதல், பெற்ற பொருள்களைச் சேர்த்தல், சேர்த்தவற்றைக் காத்தல், பகிர்ந்து கொடுத்தல் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்வதே உயர்ந்த அரசாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 271, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

271—

இழப்பீட்டுத் தொகை

***990—திரு. மு. திராவிடமணி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வன உயிரினங்களால் தாக்கப்பட்டு உயிரிழப்பவர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன விலங்குகளால் தாக்கப்பட்டு உயிரிழப்பவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா என்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கூடலூர் திரு. மு. திராவிடமணி அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

வன விலங்குகளால் தாக்கப்பட்டு உயிரிழப்பவர்களுக்கு, மாநில இயற்கைப் பேரிடர் நிவாரண நிதி மேலாண்மைமூலம் வழங்கப்பட்டு வரும் நிவாரணத்திற்கு இணையாக 25–11–2016 முதல் ரூபாய் 3 இலட்சத்திலிருந்து ரூபாய் 4 இலட்சமாகவும், காயமடைந்தவர்களுக்கு ரூபாய் 30,000/–லிருந்து ரூபாய் 59,100/- ஆகவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில் உயர்த்தி வழங்கப்பட்டு வந்தது. அதுவே தொடர்ந்து மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் ஆட்சியிலும் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மீண்டும் நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதையும், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுடைய கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்று அரசு சிந்திக்கும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதன்-வன விலங்கு மோதல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள 10–க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் மிகப் பெரிய சவாலாக இப்பிரச்சினை உருவெடுத்து மனித குலத்துக்கே அச்சுறுத்தலாக உள்ளது. இதை ஒரு* sensational issue*–ஆக அரசு எடுத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள நீலகிரி மாவட்டத்தில், அதுவும் குறிப்பாக, கூடலூர் சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் கடந்த ஆண்டு மட்டும் 50 பேர் இறந்துள்ளார்கள்; நூற்றுக்கணக்கானோர் காயமுற்றுள்ளார்கள்; ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய உற்பத்திப் பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளன;*

கால்நடைகள் பல இறந்துள்ளன. குறிப்பாக, யானைகளால் இந்த ஆண்டு மட்டும் மாதத்திற்கொருவர் என்ற வீதத்தில் 7 பேர் இறந்துள்ளார்கள். ஆகவே, தற்போது பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிற 7 இலட்சம் ரூபாயும், காயமுற்றவர்களுக்கு வழங்கப்படுகிற 50,000 ரூபாயும் மற்றும் விவசாயப் பொருள்களுக்கு வழங்கப்படுகிற இழப்பீட்டுத் தொகையும், அவர்களுக்கு ஏற்பட்ட பொருள் இழப்புக்கும், உயிரிழப்புக்கும், துக்கத்துக்கும், துயரத்திற்கும் ஈடாகவும், போதுமானதாகவும் இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உயிரிழந்தவர்களுக்கு 10 இலட்சம் ரூபாயாகவும், அதேபோல காயமுற்றவர்களுக்கு அவர்களின் சிகிச்சைக்கும், அவர்களின் ஊனத்தின் தன்மைக்கு ஏற்றவாறு இரண்டு மடங்காக உயர்த்தி இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இதற்கு ஒரு தொகுப்பு நிதியம் உருவாக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேகமாகப் பேசி முடியுங்கள்.

திரு. மு. திராவிடமணி: மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் இதற்கு ஒரு தொகுப்பு நிதியம் உருவாக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இறந்தவுடனே 50,000 ரூபாய் கொடுப்பதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும், அந்தக் கண்காணிப்புக் குழுவில் இருக்கும் உறுப்பினர்களுக்கு அரசே சம்பளம் வழங்க வேண்டும். வேட்டை தடுப்புக் காவலர்களுக்கு இணையாக அவர்களுக்கு சம்பளம் வழங்க மறுபரிசீலனை செய்து அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே கல்லில் 3, 4 மாங்காய் அடிக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திராவிடமணி முயற்சிக்கிறார். அவர் கேட்ட மூலக் கேள்வி, விலங்குகள்மூலம் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் அதிகமாக நிதி வேண்டும் என்பதுதான். அப்படிக் கேட்டிருக்கிற கேள்வியைத்தான் மறுபடியும் திருப்பிக் கேட்டிருக்கிறார்கள். அதற்கு ஏற்கெனவே நான் பதில் கூறியிருக்கிறேன்.

[2018 ஜூலை 5

முற்பகல் 10–05

மாநிலத்தில் வன உயிரினங்கள் காடுகளிலிருந்து வெளியேறி குடியிருப்புப் பகுதிகளிலும், விளை நிலங்களிலும் நுழைந்து, மக்களுக்கும், சொத்துக்களுக்கும், பயிர்களுக்கும் சேதம் விளைவிப்பதைத் தடுக்க மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது வழியில் செயல்படுகிற அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 2011–2012 முதல் 2017–2018 வரை 1,988 கி.மீ. நீளத்திற்கு 63.15 கோடி ரூபாய் செலவில் யானைகள் புகா அகழிகள் அமைக்கப்பட்டன. 2017–2018 வரை 62 கி.மீ. நீளத்திற்கு 1.25 கோடி ரூபாய் செலவில் சூரிய மின் வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல, 2015–2016 ஆம் ஆண்டில் 39 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து, சூரிய ஒளிமூலம் இயங்கும் மின் மோட்டார்கள்மூலம் விலங்குகளுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 2017–2018 ஆம் ஆண்டில் காப்புக் காடுகளில் ரூ.3 கோடி செலவில், 60 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டு, வன உயிரினங்களுக்குத் தேவைப்படும் நீர் ஆதாரங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. யானைகள், மிருகங்கள் மூலமாக இதுபோன்ற விபத்துகள் ஏற்படுகிறபோது, நடவடிக்கை மேற்கொள்ள அதி விரைவுக் குழுக்கள் கோயம்புத்தூர், கூடலூர், உதகமண்டலம், கிருஷ்ணகிரி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே, அதுபோன்ற மோதல்கள் ஏற்படுகின்றபோது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற இழப்பீட்டுத் தொகைகளைப் பற்றி நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் உறுப்பினராக சென்ற முறை இருந்தபோது, 2010 ஆம் ஆண்டு வரை, மனித உயிரிழப்புகள் ஏற்பட்டால் ரூ.1.5 இலட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ.30,000/–மும், பயிர்ச் சேதம் ஏற்பட்டவர்களுக்கு ரூ.15,000/–மும் வழங்கப்பட்டன. மாண்புமிகு அம்மா அவர்கள் 2011–ல் ஆட்சிக்கு வந்த பிறகு மனித உயிரிழப்புகளுக்கு ரூ.3 இலட்சமாகவும், பின்னர் 2016 ஆம் ஆண்டு மனித உயிரிழப்புகளுக்கு ரூ.4 இலட்சமாகவும், பலத்த காயம் ஏற்பட்டவர்களுக்கு தி.மு.க. ஆட்சியில் ரூ.30,000/– வழங்கப்பட்டதை தற்போது ரூ.59,100/–ஆக உயர்த்தியிருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியில் ரூ.15,000/– ஆக இருந்த பயிர் இழப்பிற்கு தற்போது ரூ.25,000/– வழங்கப்படுகிறது. வீடு இடிந்தால் அதற்கு

2018 ஜூலை 5]

ரூ.95,100/– தற்போது மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் ஆட்சியில் வழங்கப்படுகிறது என்பதையும், குடிசை வீடுகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.5,000/– வழங்கப்பட்டு வந்தது தற்போது ரூ.10,000/– ஆக வழங்கப்படுகிறது என்பதையும், கான்கிரீட் வீடுகளுக்கு கொடுக்கப்பட்டு வந்த 3,000 ரூபாய் 95,100 ரூபாயாகவும், குடிசை வீடுகளுக்கு வழங்கப்பட்டு வந்த 2,000 ரூபாய் 5,000 ரூபாயாகவும், கறவை மாடுகளுக்கு வழங்கி வந்த 10,000 ரூபாய் 30,000 ரூபாயாகவும், காளை மாடுகளுக்கான இழப்பீட்டுத் தொகை 10,000 ஆக இருந்தது ரூ.30,000 ஆகவும் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக இந்த அரசு வழங்குகிறது.

அதேபோல, வெள்ளாடுகள் இறந்தால் தி.மு.க. ஆட்சியில் 1,000 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்ததை, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலும், தற்போது மாண்புமிகு திரு. எடப்பாடியார் அவர்கள் ஆட்சியிலும் உயர்த்தி, ஒரு வெள்ளாடு இறந்தால் அதற்கு 3,000 ரூபாயும், செம்மறி ஆடு இறந்தால் 3,000 ரூபாயும்; கோழி ஒன்றுக்கு 30 ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக தி.மு.க. ஆட்சியில் கொடுக்கப்பட்டு வந்ததை இப்பொழுது ஒரு கோழிக்கு 100 ரூபாயாகவும், பன்றி இறந்தால் தி.மு.க. ஆட்சியில் 1,000 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்ததை தற்பொழுது 3,000 ரூபாயாகவும், வீட்டுப் பொருட்கள் சேதமடைந்தால் தி.மு.க. ஆட்சியில் 1,000 ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டதை தற்பொழுது 2,000 ரூபாயாகவும், கடைகள் சேதமடைந்தால் தி.மு.க. ஆட்சியில் 3,000 ரூபாயாக இருந்ததை தற்பொழுது 4,000 ரூபாயாகவும் மக்கள் எதிர்பார்க்காத அளவிற்கு நிதியை உயர்த்தி வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் கூறியதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதைப் பற்றி இந்த அரசு சிந்திக்கும் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்பு நடவடிக்கைகளான அகழிகள் வெட்டுவது மற்றும் வன விலங்குகள் விரும்பி உண்ணும் உணவுகளை வனத்தில் வளர்ப்பது போன்ற நடவடிக்கைகள் முறையாகவும்,

சரியாகவும் அமையாத காரணத்தினால்தான் இத்தகைய விபத்துகளும், மோதல்களும் அடிக்கடி நடைபெறுகின்றன. ஆகவே, வெட்டப்படும் அகழிகளை 3 மீட்டர் உயரம், 3 மீட்டர் அகலம் மற்றும் slope ஆகவும் அமைக்க வேண்டும். மேலும், அவற்றைத் தூர்வார வேண்டும். ஆனால், அகழிகள் வெட்டப்பட்டவுடன் அந்த மண்ணை அப்படியே விட்டுவிட்டுச் சென்று விடுகிறார்கள். அதனால் மழைக் காலங்களில் அந்த மண் குழிகளுக்குள்ளேயே விழுந்து, அகழிகளினால் பயனில்லாமல் போய்விடுகிறது. எனவே, அகழிகள் வெட்டப்படும்போது விஞ்ஞானபூர்வமாகவும், தூர் வாரியும் பயன்படுத்தும் வகையில் இருந்தால் இத்தகைய விபத்துகளைத் தடுக்கலாம்.

அதேபோல, கடந்த நிதியாண்டில் வன விலங்குகள் விரும்பி உண்ணும் உணவு வகைகள் வனத்தில் வளர்க்கப்படும் என்று அறிவித்திருந்தீர்கள். ஆனால், அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எதுவுமே எடுக்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வன விலங்குகள் விரும்பி உண்ணும் உணவான மூங்கில், பலா, வாழை மற்றும் குந்தபனை பனை ஆகிய தாவரங்களை வனங்களில் வளர்த்தால், நிச்சயமாக இதுபோன்ற விபத்துகளைத் தடுக்க வாய்ப்பு இருக்கிறது.

அதேபோல, முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள 321 சதுர கிலோ மீட்டரில் உன்னிச் செடிகளும், பார்த்தீனியம் செடிகளும் பரந்து வளர்ந்திருக்கின்றன. அதனால், அங்கிருக்கும் யானைகள் ஊர்ப்புறம் வந்துவிடுகின்றன. ஆகவே, 321 சதுர கிலோ மீட்டரில் வளர்ந்திருக்கின்ற உன்னிச் செடிகளையும், பார்த்தீனியச் செடிகளையும் முற்றிலுமாக அகற்ற வேண்டும். அப்படி அகற்றினால்தான், யானைகள் ஊருக்குள் புகாமல் தடுக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்கள் கேள்வியுடன் கேள்வி நேரத்தை முடித்துவிடலாமா? ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? (குறுக்கீடு) இல்லை, இல்லை. முக்கியமானதுதான், இல்லையென்று சொல்லவில்லை. இங்கே பாருங்கள் திரு. திராவிடமணி, என்னிடம் argue செய்ய வேண்டாம். நான் சொன்னால் புரிந்துகொள்ளுங்கள். மணியைப் பாருங்கள், 10 நிமிடங்கள் ஆகின்றன. இந்த ஒரு கேள்விக்கே 10 நிமிடங்கள் எடுத்தால், நான் 10 கேள்விகளை எவ்வளவு நேரத்தில் முடிப்பது?*

2018 ஜூலை 5]

முற்பகல் 10–10

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான தடுப்பு நடவடிக்கைகளை விரைந்து எடுத்து மனித குலத்தைக் காப்பாற்றுவார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித குலத்தைக் காக்கின்ற மானிட பகவானாக தம்பி மாண்புமிகு உறுப்பினர் திராவிடமணி இருக்கிறார்கள். ஆனாலும், அவர் குறிப்பிட்ட அந்தத் தடுப்பணைகள் எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பது தெரியும். உங்களுக்குத் தெரியும், வனத் துறையில் இருக்கின்ற மூத்த அதிகாரிகள் எல்லாம் I.F.S. அதிகாரிகள். I.A.S., I.P.S. அதற்கு அடுத்து I.F.S. அதிகாரிகள், எல்லோருமே அந்த rank–ல் வந்தவர்கள். சட்டத்தை மீறி யாருமே செய்ய மாட்டார்கள். ஒவ்வொரு தடுப்பணையையும் மனிதர்கள் போகாத இடத்தில், யானைகள் வருகின்ற, புலிகள் வருகின்ற இடத்தில் காட்டுக்குள்ளே சென்று மிகக் கடுமையாக அமைத்திருக்கிறார்கள். நான் நேரடியாகப் பல இடங்களுக்குச் சென்று பார்வையிட்டிருக்கிறேன். வேண்டுமானால் மாண்புமிகு திராவிடமணி அவர்கள் குறிப்பிடுகிற நாளில், அவருடைய பகுதிக்கு வனத் துறையின் I.F.S. அதிகாரிகளோடு சென்று பார்ப்போம். நிச்சயமாக எந்த அளவும் மீறாமல், அளவுக்கு உட்பட்டு அந்த அணைகள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அவையெல்லாம் சரியாக இல்லை என்று அவர் சொல்லியிருக்கிற அந்தக் குற்றச்சாட்டு தவறானது என்று நான் கருதுகிறேன். மறுபடியும் அவர் பார்க்கட்டும்; ஏதாவது குறிப்பிட்ட இடத்தில் இப்படி இருக்கிறது என்று சொன்னால் சம்பந்தப்பட்ட வன அதிகாரிகளை அழைத்து அதுபற்றிப் பேசலாம். நிச்சயமாக விலங்குகளால் மனிதர்களுக்கு ஆபத்து ஏற்படாத வகையில்தான் இந்த வனத் துறையை வைத்திருக்கிறார்கள். அதில் இம்மியளவுகூட குறையில்லாமல் வனத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 272, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.